Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

**C.C.No.56/2016**

Deposition of witness for: PW - 10

| | | | |
|---|---|---|---|
| Name | : இளங்கோ | Father/Husband Name | : திருமால் |
| Age | : | Calling | : |
| Date | : 17.12.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of December 2025

**(** சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது **).**

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது திருநெல்வேலி உட்கோட்ட இருப்புப்பாதை காவல் நிலையத்தில் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.01.2013ம் தேதி நான் கொட்டாம்பட்டி காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது மேற்படி காவல் நிலைய சார்பாய்வாளர் திரு.சடச்சி கருப்பண்ணன் பதிவு செய்திருந்த மேற்படி காவல் நிலைய குற்ற எண்.04/2013 இ.த.ச.பிரிவுகள் 406, 420, 465, 468, 471-ன் கீழான வழக்கை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09.01.2013ம் தேதி சம்பவ இடம் சென்று, சாட்சிகள் களஞ்சியம், பழனிச்சாமி ஆகியோர் முன்பு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். (அந்த பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.9** ஆகவும்**,** மாதிரிவரைபடம் அ**.**சா**.**ஆ**.10 -** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.**) பின்னர் அன்றையதினமே காலை 11.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரியான கிருஷ்ணன் என்ற கெவினை அவரது வீட்டில் முன்னால் வைத்து கைது செய்து விசாரித்து, அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தனசேகர் மற்றும் சின்னையா முன்னிலையில் பதிவு செய்தேன். (அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ**.**சா**.**ஆ**.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், சாட்சிகளின் முன்னிலையில் எதிரி அவரது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த திரு.ராஜாராம், துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுங்கத்துறை, மதுரை என்று எழுதப்பட்ட ரப்பர் ஸ்டாம்ப் சீல் ஒன்று, சு.வேடிட்டன், உதவி புவியாளன், புவியியல் மற்றும் சுங்கத்துறை, மதுரை-20 என்று எழுதப்பட்ட ரப்பர் ஸ்டாம்ப் சீல் ஒன்று, துணை இயக்குநர் புவியியல் மற்றும் சுங்கத்துறை, மதுரை-20 என்று

எழுதப்பட்ட ரப்பர் ஸ்டாம்ப் சீல் ஒன்று, துணை இயக்குநர் அலுவலகம், புவியியல் மற்றும் சுங்கத்துறை, மதுரை-20 என்று எழுதப்பட்ட ரவுண்ட் சீல் ஒன்று, துணை இயக்குநர் அலுவலகம், புவியியல் மற்றும் சுங்கத்துறை, மதுரை-20 என்று எழுதப்பட்ட தேதி, மாதம் மற்றும் வருடம் கொண்ட ரவுண்ட் சீல் ஒன்று, தேதி, வருடம் மற்றும் மாதம் கொண்ட ரோலிங் சீல் ஒன்று, அனுப்புகை சீட்டு வரிசை எண்.901 முதல் 1000 வரை உள்ள புக் ஒன்று மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.க.எண்.எம் 636/2000, நாள் 31.10.2000, 04.11.2000 முதல் 05.11.2005 வரை- ஆகியவற்றை அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். (அந்த அத்தாட்சி அ.சா.ஆ**.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது) எதிரியை நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு ஒப்படைத்தேன். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். (அந்த படிவம் **91** அ.சா.ஆ**.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)** **(**படிவம் **91** ல் உள்ள ஆறு எண்ணிக்கை சீல்களின் அச்சுகள் பொறிக்கப்பட்ட தாள் அ.சா.ஆ**.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது) அதே தேதியில் சாட்சிகள் ஆறுமுக நைனார், தங்கம், செல்வம், நடராஜன், களஞ்சியம், பழனிச்சாமி, தனசேகரன், சின்னையா மற்றும் சார்பு ஆய்வாளர் சடச்சி கருப்பண்ணன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் இ.த.ச.பிரிவுகள் 406, 420, 465, 468, 471 -ளிலிருந்து இ.த.ச.பிரிவுகள் 406, 420, 465, 468, 471 மற்றும் 379 ஆக சட்டப்பிரிவுகளை மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். (அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ**.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது) எனது பணிமாறுதல் காரணமாக வழக்குக்கோப்பை எனக்கு பின்னால் வந்த காவல் ஆய்வாளர் திரு.ஆவுடையப்பன் என்பவரிடம் ஒப்படைத்துவிட்டேன்.

எதிரி ஆஜர் இல்லை**,** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.**

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

முதல் தகவல் அறிக்கையின் அச்சுப்படிவத்தில் உள்ள முதல் பக்கத்தில் இந்த வழக்கின் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் அய்யாம்பட்டி கிராமம், அரசு புறம்போக்கில் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதுவிசயமாக, அய்யாம்பட்டி கிராம அதிகாரியோ அல்லது தலையாரியோ அல்லது அய்யாம்பட்டி கிராம பொதுமக்களோ என்னிடம் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது, அரசியல் மற்றும் கல்குவாரி ஏலம் சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனைகளால் இந்த எதிரியின் மீது இந்த வழக்கு பொய்யாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல் அ.சா.ஆ.1 புகார் மனுவானது மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கனிமம் மற்றும் சுரங்க விதிகள்

சம்பந்தமாகவும், கல்குவாரி சம்பந்தப்பட்டதில் ஏதேனும் தவறுகள் நடந்தால் அதை Taluk Level Task Force மற்றும் District Level Task Force -ல் உள்ள உறுப்பினர்கள் அருகில் உள்ள காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவேண்டும் என்றால், அது சம்பந்தமாக எனக்குத் தெரியாது. இதுகுறித்து எனக்கு தெரிந்திருந்தால், அவர்களையும் விசாரித்து சாட்சிகளாக வழக்கில் சேர்த்திருப்பேன் என்றால் சரிதான்.

அ.சா.ஆ.10 வரைபடத்தில் எதிரி கிருஷ்ணன் என்பவரின் வீட்டை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு அவரது வீட்டை குறிப்பிட்டிருந்தால் எங்கள் வழக்கிற்கு பாதிப்பு நேரிடும் என்பதால் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியிலும், சொன்ன வருடத்தில், சொன்ன நேரத்தில், நான் எதிரியை கைது செய்யவில்லை, அவர் கருங்காலக்குடி கிராம நிர்வாக அதிகாரி மற்றும் தலையாரி முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை மற்றும் அவர்கள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் வழக்கு சொத்துக்களை கைப்பற்றவும் இல்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்பதால்தான், அய்யாம்பட்டி கிராம நிர்வாக அலுவலரும், தலையாரியும் எங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க மறுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்கூறிய இருவரும் பொய்ப்புகார் கொடுக்க மறுத்ததனால், கனிமவளத்துறை கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவர்கள் இருவரையுமே வேறு ஊருக்கு மாற்றிவிட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. எதிரியானவர் யாருடைய துன்புறுத்தலும், வற்புறுத்தலும் இல்லாமல் தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்ற நிலையில், நான் அவரை நீதித்துறை நடுவர் முன்னிலையில் குவிமுச பிரிவு 164 -ன் கீழ் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால், சரிதான்.

அதேபோல் கனிம வளத்துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள போலியான ரப்பர் ஸ்டாம்புகள் மற்றும் தாஸ்தாவேஜுகள் ஆகியவற்றை கைப்பற்றி நான் அவற்றை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு உட்படுத்தவில்லை என்றால், சரிதான். அவ்வாறு தாங்கள் அனுப்பியிருந்தால் அது வழக்கிற்கு பாதகம் ஏற்படும் என்பதால், நான் அனுப்பவில்லை என்றால், சரியல்ல. அதேபோல் இந்த வழக்கில் கனிமத்துறையில் மிக முக்கியமான சாட்சிகளான ராஜாராம் மற்றும் வேடிட்டான் ஆகியோர்களை விசாரித்து இவ்வழக்கில் அவர்களை சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால், சரிதான். அவர்களை நான் விசாரித்திருந்ததால், இந்த வழக்கிற்கு குந்தகம் ஏற்படும் என்பதனால், அவர்களை சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

அய்யாம்பட்டி கிராம நிர்வாக அதிகாரிகள், தலையாரி ஆகியோர்கள் பொய்யாக புகார் கொடுக்க மறுத்துவிட்டதனால், உடனடியாக மதுரை மாவட்ட ஆட்சித்தலைவரால், இவ்வழக்கில் சம்பந்தம் இல்லாத கருங்காலக்குடி கிராம நிர்வாக அதிகாரி மற்றும் தலையாரி ஆகியோரிடம் ஒன்றும் எழுதாத வெற்றுக்காகிதத்தில் கையொப்பங்கள் மட்டும் பெறப்பட்டு, இவ்வழக்கின் அத்தாட்சி தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இருந்து இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக எழுத்துப்பூர்வமான புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால், சரிதான்.

அ.சா.ஆ.9 ஆன முதல் தகவல் அறிக்கையில் இவ்வழக்கின் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆண்டு 2012 என்று குறிப்பிடப்பட்டுள்ளது, இது சம்பந்தமாக கடந்த 08.01.2013ம் தேதிதான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான், அவர் கொடுத்த புகாரில் சம்பவம் 01.04.2012 முதல் இன்று வரை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரானது காலதாமதமாக கொடுக்கப்பட்டதற்கு காரணங்கள் இவ்வழக்கின் அரசு தரப்பு சாட்சிகளிடமிருந்து விசாரணையில் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. அதேபோல் அ.சா.ஆ. 12 அத்தாட்சியில் 7வது வழக்கு சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள அனுப்புகை சீட்டு வரிசை எண்.901 முதல் 1000 வரை உள்ள புக் ஒன்று உள்ளது என்றால் சரிதான்.

இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்துமே இந்த வழக்கிற்காக முன்கூட்டியே தயார் செய்யப்பட்டு, இவ்வழக்கிற்காக போர்ஜரியாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால், சரியல்ல. இந்த எதிரியானவர் அய்யாம்பட்டி கிராம பஞ்சாயத்தில் ஏறக்குறைய 25 வருடங்களாக எவ்வித போட்டியும் இன்றி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் என்றால், எனக்குத்தெரியாது.

அதேபோல் அய்யாம்பட்டி கிராமம் மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் இருக்கக்கூடிய கிரானைட் முதலாளிகள் ஒரு குழு அமைத்து மிக்குறைந்த விலையில் குவாரி ஏலம் எடுத்து, அரசாங்கத்திற்கு கோடிக்கணக்கான பணத்தை நஷ்டம் ஏற்படுத்தி வந்தார்கள், இந்த வழக்கு எதிரியானவர் மேற்படி மோசடி சம்பந்தமாக மாவட்ட ஆட்சித்தலைவர், தமிழக முதல்வர் மற்றும் கனிம வளத்துறை அதிகாரிகளுக்கு புகார் கொடுத்தார், அந்த புகாரிலே வருவாய்த்துறை அதிகாரிகள், கனிம வளத்துறை அதிகாரிகள், குறிப்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தை சேர்ந்த அதிகாரிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்து மேற்படி குழுவிற்கு ஆதரவாக ஒத்துழைத்து, அரசாங்கத்திற்கு கோடிக்கணக்கான பண நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டார்கள் என்று இவ்வழக்கின் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில், விசாரணை நடைபெற்றது என்றும், மேற்படி விசாரணையிலிருந்து தப்பிப்பதற்காக மேலே கண்ட

நபர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து திட்டமிட்டு, எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

கருங்காலக்குடி கிராம நிர்வாக அதிகாரி மற்றும் தலையாரி ஆகியோர்கள் சொன்ன தேதியில், சொன்ன வருடத்தில், சொன்ன நேரத்தில் அவர்கள் பணியில் இருந்தார்கள் என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் சாட்சிகளை முறையாக விசாரணை செய்யவில்லை, இது பொய்வழக்கு என்று தெரிந்ததால் நான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.